



தமிழ்நாடு துணை முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (29.9.2024) தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதைத் தடுத்திடவும் – சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும்

# வலுவான தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்வீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, செப்.30-

**இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதைத் தடுத்திடவும், சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் வலுவான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:-


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு நேற்று (29.09.2024) எழுதியுள்ள கடிதத்தில், இராமேஸ்வரம் மீன் பிடித்தளத்திலிருந்து IND TN10MM411 மற்றும் INDTN10MM544 பதிவு எண்களைக் கொண்ட இரண்டு படகுகளில் 28.09.2024 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த 17 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்து நிலையில், இன்று (29.09.2024) நெடுந்தீவு அருகே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் கடலோர பகுதிகளில் வாழும் மீனவ சமுதாயத்தினரிடையே மிகுந்த துயரத்தையும், அவர்களது வாழ்வில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த சிக்கலான பிரச்சினையை தூதரக ரீதியாகத் தீர்த்திட உறுதியான மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தான் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளதாகவும், நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, 27.09.2024 அன்று இந்தியப் பிரதமர் அவர்களிடம் சமர்ப்பித்த கோரிக்கைகளில் ஒன்றாக இந்தக் கோரிக்கையையும் வலியுறுத்தியுள்ளதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசிடமிருந்து உடனடியாக விடுவிக்கவும், வலுவான மற்றும் பயனுள்ள தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### உங்கள்

## அன்னையைப் போலவே நானும் மகிழ்கிறேன்!



**துணை முதல்வராகும்**
**உதயநிதி ஸ்டாலின் அவர்களே**
**உங்களை வாழ்த்துகிறேன்**

**உங்கள்**
**அன்னையைப் போலவே**
**நானும் மகிழ்கிறேன்**

**இந்த உயர்வு**
**பிறப்பால் வந்தது என்பதில்**
**கொஞ்சம் உண்மையும்**
**உங்கள் உழைப்பால்**
**வந்தது என்பதில்**
**நிறைய உண்மையும் இருக்கிறது**

**பதவி உறுதிமொழி ஏற்கும்**
**இந்தப் பொன்வேளையில்**
**காலம் உங்களுக்கு**
**மூன்று பெரும் பேறுகளை**
**வழங்கியிருக்கிறது**

**முதலாவது**
**உங்கள் இளமை**

**இரண்டாவது**
**உங்கள் ஒவ்வோர் அசைவையும்**
**நெறிப்படுத்தும் தலைமை**

**மூன்றாவது**
**உச்சத்தில் இருக்கும்**
**உங்கள் ஆட்சியின் பெருமை**

**இந்த மூன்று நேர்மறைகளும்**
**எதிர்மறை ஆகிவிடாமல்**
**காத்துக்கொள்ளும் வல்லமை**
**உங்களுக்கு வாய்த்திருக்கிறது**

**உங்கள் ஒவ்வோர் நகர்வும்**
**மக்களை முன்னிறுத்தியே**
**என்பதை**
**மக்கள் உணரச் செய்வதே**
**உங்கள் எதிர்காலம்**

**என் பாடலைப் பாடிய**
**ஒரு கலைஞன்**
**துணை முதல்வராவதை எண்ணி**
**என் தமிழ் காரணத்தோடு**
**கர்வம் கொள்கிறது**

**கலைஞர் வழிகாட்டுவார்**

**துணை முதல்வராகும் நீங்கள்**
**இணை முதல்வராய்**
**வளர வாழ்த்துகிறேன்**

**- கவிப்பேரரசு வைரமுத்து**

### உதயநிதி ஸ்டாலின், துணை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்று, மேலும் மேலும்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மாட்சியை வளர்ப்பார் என்பது உறுதி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, செப்.30-*

*உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:-*



தி.மு.க. அரசில் இளைஞர் நலன் விளையாட்டுத் துறை அமைச்சராகி, அதில் குறுகிய காலத்திலேயே முத்திரை பதித்து சாதனைகளைச் செய்த அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றுச் செயல்படுவார் என்று நமது ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்று. சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு ஆகும்.

இயக்கத்தில் அவர் இளைஞரணிச் செயலாளர் பொறுப்பை ஏற்ற பிறகு, தி.மு.க.வில் இளைஞர்களிடையே கொள்கைப் பாசறை அமைத்து, திராவிட இயக்கத்தின் வேர்களை அறிந்து, புரிந்து கொள்ளும் விழுதுகளாக அவர்களைப் பக்குவப்படுத்தும் பயனுறு பாராட்டத்தக்க பணியை மேற்கொண்டார்!

அவரது தேர்தல் பிரச்சார கடும் உழைப்பு, இயக்க முதியவர்களைக் கனிவோடு அவர் பெருமைப்படுத்தல் போன்ற பல நல்ல பண்புகளால், அவர் நாளும் முதிர்ச்சி பெற்று வளர்ந்து கொண்டே உள்ளார்.

இளையர்கள் மட்டுமல்ல, முதியவர்களும், பொதுவானவர்களும் அவரது செயல் திறன் ஆற்றல் கண்டு வியக்கின்றனர் பொறாமைக்காரர்களைத் தவிர.

துணை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்று, மேலும் மேலும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மாட்சியை வளர்ப்பார் என்பது உறுதி!

தி.மு.க. என்ற பேரியக்கத்தினை நல்ல கொள்கை இயக்கமாகவே ஆக்கிடும் அடிப்படைப் பணி அவரது தனித்தன்மையாகட்டும்!

அவர் அடக்கத்துடன் பதவி ஏற்கும் முன் குறிப்பிட்டுள்ளபடி ‘தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ‘மானமிகு சுயமரியாதைக் காரர்’ கலைஞர் கொள்கைகளின் வழியே செயல்பட்டு, கடமையாற்றுவேன்’ என்ற உறுதியே அவரை நாளும் மெருகேற்றும். அவரது புதிய பொறுப்பேற்பு ஆட்சிக்கும், கட்சிக்கும் புதிய திருப்பத்தைத் தரும் என்று நம்பி தாய்க்கழகமான திராவிடர் கழகம் வாழ்த்தி மகிழ்கிறது.

அதுபோல இளையர்களுக்கு வாய்ப்பு என்ற அடிப்படையில் புதிதாக பொறுப்பேற்கும் அமைச்சர்களுக்கும் நமது வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

# இளைய சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளியாக ஒளிர்க!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு – தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர் வாழ்த்து!

*சென்னை, செப்.30-*

*துணை முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து, அவருக்கு தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் - நடிகர் எம்.நாசர் அவர்கள் எழுதியுள்ள மடலில்,*

*“இளைய சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளியாக ஒளிர்க!” என்று குறிப்பிட்டுள்ளார்.*

நடிகர் சங்கத் தலைவர் நாசர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

பேரன்பிற்கும் மரியாதைக்குரிய தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, வணக்கம்.



தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினருமான தாங்கள் தமிழ்நாடு அமைச்சரவையில் துணை முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள தங்களுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக உள்ளார்ந்த மகிழ்ச்சியையும், மனமார்ந்த பாராட்டுகளையும் மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், இளைய சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளியாக ஒளிரவும் நம் தமிழகத்தை உலகமே உற்று நோக்கும் வகையில் சீரிய முறையில் தங்களின் பணி சிறக்க வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அம்மடலில், நடிகர் நாசர் குறிப்பிட்டுள்ளார்.

### அரசியல், சமூக நலத்துறை – மக்களின் நன்மைக்காகச் செய்த

# உழைப்பின் அங்கீகாரமே இந்த உயர்ந்த பதவி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு – இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்.செந்தில் தொண்டமான் வாழ்த்து!

*கொழும்பு, செப்.30-*

*தமிழ்நாட்டின் துணை முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்.செந்தில் தொண்டமான் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

அவரது அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு மாநிலத்தின் துணை முதல்வராக நீங்கள் இன்று பதவியேற்ற செய்தியை கேட்டதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அரசியல், சமூக நலத்துறை மற்றும் மக்களின் நன்மைக்காகச் செய்த உழைப்பின் அங்கீகாரம் இந்த உயர்ந்த பதவி தங்களுக்கு கிட்டி இருக்கிறது. உங்கள் அனுபவமும், ஊக்கமும் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை ஏற்படுத்தும்.

உங்கள் புதிய பொறுப்பில் சிறப்பாக செயல்பட்டு தமிழ்நாட்டு மக்கள் நலனிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையிலும் புதிய மைல்கல் எட்ட மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்.செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# அரசு தலைமைக் கொறடாவாக குன்னூர் கா.இராமச்சந்திரன் நியமனம்!

## தமிழ்நாடு சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, செப். 30 -



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கா.ராமச்சந்திரன் அரசுத் தலைமைக் கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார் என தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் தெரி வித்துள்ளார்.

### உவத்தல் காய்தலின்றி – பொதுநிலை போற்றி

# அன்பும் நேசமும் காட்டி ஆட்சி செய்திடுவீர்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு – தருமபுரம் ஆதீனம் வாழ்த்து!

*மயிலாடுதுறை, செப்.30-*

*துணை முதலமைச்சர் பெறுப்பு ஏற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தருமபுரம் ஆதீனம் வாழ்த்துத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.*

*அதில் அவர், “உவத்தல் காய்தலின்றி பொதுநிலை போற்றி அன்பும் நேசமும் காட்டி ஆட்சி செய்திடுவீர்!” என்று குறிப்பிட்டுள்ளார்.*



தருமபுரம் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்ப தாவது:-

உதயநிதி ஸ்டாலின் அவர்கட்கு வாழ்த்துக்கள். தாங்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு பாராட்டுக்கள்.

தாங்கள் தங்கள் தந்தையின் வழிநின்று நல்லதொரு ஆட்சி ஆளுமை செய்திட மக்களின் தேவையை உணர்ந்து உவத்தல் காய்தலின்றி பொதுநிலை போற்றி அன்பும் நேசமும் காட்டி ஆட்சி செய்திட செந்தமிழ்ச் சொக்கன் திருவருளை சிந்திக்கின்றோம்.

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் தருமபுரம் ஆதீனம் கூறியுள்ளார்.

# நடிகர் சத்யராஜ் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து!

சென்னை, செப்.30-



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின்அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் பொறுப்பை நேற்று வழங்கினார்.

புதிய துணை முதலமைச்சராகப் பதவி உயர்வு பெற்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, அமைச்சர் பெருமக்கள், சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலர் நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகர் சத்யராஜ், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு அலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தார்.